**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 - 2020**

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 04 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்பாட்டில் இருக்கும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) நீடிப்பதனூடாக வர்த்தக நகர் (கொழும்பு) மற்றும் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கடற்துறைமுகம் (அம்பாந்தோட்டை) மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) என்பனவற்றிற்கிடையே தொடர்பினை பேணுதல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் பகுதி 4 இன் கீழான அந்தரவேவ ஊடான மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 25 கி.மீ இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 55,965 மில்லியனாக உள்ளதுடன், அதில் ரூபா 55,615 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 435 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி ரூபா 350 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நிர்மான வேலைகள் 2016 சனவரி 19 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 சனவரி 19 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 2019 ஜுலை 09 வரை பின்னர் நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலின நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது காணி சுவீகரிப்பு இழப்பீடுகள் மீதான தாமத வட்டிக்கொடுப்பனவுடன் தொடர்புபட்ட ஓர் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 8.13 | முறையான பதில் வழங்கப்படும். | காணி சுவீகரிப்புக்களுடன் தொடர்புபட்டு இற்றைப்படுத்தப்பட்ட தகவல் பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காணி சுவீகரிப்பிற்கான சட்டபூர்வமான இழப்பீடு தாமதத்துடன் செலுத்தப்பட்டிருந்தும் தாமத வட்டி 31 காணித்துண்டுகளிற்காக கணிப்பிடப்பட்டிராததுடன் அதன் பெறுபேறாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தாமத வட்டிக்கான ஏற்பாடு மற்றும் நடைமுறைவேலை என்பன நிதிக்கூற்றுக்களில் அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தன. | - | முறையான பதில் வழங்கப்படும். | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | காணி சுவீகரிப்பு மீதான இழப்பீட்டுடன் தொடர்புபட்டு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் மற்றும் நிதிக்கூற்றுக்கள் என்பனவற்றிற்கு இடையே ஓர் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 16.23 | முறையான பதில் வழங்கப்படும். | காணி சுவீகரிப்புக்களுடன் தொடர்புபட்டு இற்றைப்படுத்தப்பட்ட தகவல் பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 14.7 மற்றும் 14.8 இன் பிரகாரம், ஒப்பந்ததாரர் ரூபா 359 மில்லியன் மற்றும் ரூபா 98.7 மில்லியன் தொகை முறையே தாமத வட்டி மற்றும் தாமதிக்கப்பட்ட வட்டி மீதான | 457.7 | தாமத கொடுப்பனவிற்கான வட்டி மற்றும் தாமத வட்டிக்கான வட்டி என்பன 2020 ஆம் ஆண்டின் முடிவில் இறுதியாக்கப்பட்டிருக்கவில்லை. எனவே அது மீளாய்வாண்டிற்கு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்படல் வேண்டும். |

வட்டிக்கான மீளப்பெறுவனவாக கோரியிருந்தார். இருப்பினும் அது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவரான நிதிக் கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த விசேட நிபந்தனையின் உபபிரிவு 14.6 இன் பிரகாரம் ஓர் இடைக்கால கொடுப்பனவு பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட வேலை ஒப்பந்த பெறுமதியில் 1 சதவீதத்திற்கு அதிகமாக காணப்படல் வேண்டும். இருப்பினும் மீளாய்வாண்டின் போது இடைக்கால கொடுப்பனவு பட்டியல்களை மதிப்பாய்வு செய்யும் போது குறித்த தேவைப்பாட்டிற்கு கீழாக 03 நிகழ்வுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | கிரயம், நேரம் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கான தேவையற்ற நன்மைகள் என்பனவற்றினை குறைக்க ஒப்பந்த நிபந்தனையில் கூறப்பட்ட விடயங்களுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை உரிய ஒப்பந்ததாரரின் கிரயத்தில் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை பெறுவதற்கான ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 201.27 மில்லியன் செயலாற்றல் பாதுகாப்பு பத்திரங்களின் கிரயத்தினை மீளப்பெறுவதற்கு ஒப்பந்ததாரரிற்கு பீஓகியுவ் பெறுமதி 12.6 மில்லியன் அதிகரிப்புடன் வரைபு இறுதி அறிக்கையின் பிரகாரம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்கால ஒப்பந்ததாரர்களிற்காக செயலாற்றல் பாதுகாப்பினை மீளப்பெற அல்லது கொடுப்பனவிற்கான வேறான பீஓகியுவ் உருப்படி உள்ளடக்காமல் சீராக்கப்படும். | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 20.6 இன் பிரகாரம் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு முன்னர் அல்லது பின்னர் நடுவர்தீர்ப்பு ஆரம்பிக்கப்படலாம் என குறிப்பிடப்பட்டிருந்தது, ஓர் குறிப்பிட்ட நேர காலம் திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் நடுவர் தீர்ப்பினை ஆரம்பிக்க விசேட ஒப்பந்த நிபந்தனைகளில் கூட கூறப்பட்டிருக்கவில்லை. எனவே, 509 மில்லியன் தொகையான முன்று (03) பிணக்குகளின் பெறுவனவுகள் திருப்தியின்மையின் அறிவிப்புக்களின் பிரசுரிப்பின் பின்னர் நடுவர்தீர்ப்பிற்காக இன்னும் | உடன்பட்டனர். | திருப்தியின்மை அறிவிப்பு வழங்கப்பட்டதன் பின்னர், ஓர் விசேட நேர வரையறை நடுவர்தீர்ப்பினை ஆரம்பிப்பதற்கான விசேட நிபந்தனைகளில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் ஒப்பந்ததாரரிற்கான உரிமைத்துவம் செயற்திட்டத்தின் குறைபாட்டு நிபர்த்தி அறிவிப்பு முடிவடைந்ததிலிருந்து 1 வருடம் காலாவதியானதன் பின்னர் கூட இறுதியாக்க முடியாமலிருந்தது. எனவே ஒப்பந்ததாரர் 2020 செப்டம்பர் 30 வரை ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 14.12 இன் பிரகாரம் வெளியேறுவதற்கான கடிதத்தினை வழங்கியிருக்கவில்லை. | | |

**3.2 காணி சவிகரிப்புடன் தொடர்புடய விடயங்கள்**

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரிவு 38 (அ) வர்த்தமானி அறிவிப்பு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டிருந்தும் 54 காணித்துண்டகளிற்காக ரூபா 18.71 மில்லியன் தொகையான இழப்பீடு 2021 ஜுலை 13 அளவில் கூட செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 03 காணித்துண்டுகளிற்காக செலுத்தவேண்டிய இழப்பீடு 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | முறையான பதில் வழங்கப்படும். | தாமதங்கள் இன்றி இழப்பீட்டை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டமானது பூர்த்திசெய்யப்பட்டு 2020 ஜுலை 31 இல் செயலாற்றல் பத்திரம் வழங்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்திற்கான எவ்வித காணித்துண்டுகளும் காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு இல 44 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு சட்டத்தின் உபபிரிவு 44 இன் பிரகாரம் பூர்த்திசெய்ய தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |